## தூத்துக்குடி - ஏரல் அருகே முக்காணி கிராமத்தில் - சாலை விபத்தில்

# உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

சென்னை, ஜீன் 25-

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் அருகே முக்காணி கிராமத்தில் நிகழ்ந்த சாலைவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவியும் வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், முக்காணி கிராமம், தூத்துக் குடி - திருச்செந்தூர் சாலையில், சாலையோரமாக நின்று, தெரு குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது நேற்று முன்தினம் (23.06.2024) காலை 6.30 மணியளவில் தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர் நோக்கி வந்துகொண்டிருந்த நான்கு சக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த முக்காணி கிராமத்தைச் சேர்ந்த திருமதி. நட்டார் சாந்தி (வயது 50) க/பெ.பலவேசம் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும், இவ்விபத்தில்பலத்த காயமடைந்த திருமதி.அமராவதி (வயது 58) க/பெ.சித்திரைவேல் மற்றும் திருமதி.பார்வதி (வயது 35) க/பெ. குமார் ஆகிய இருவரும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழுந்தனர் என்ற துயரகரமான செய்தியை அறிந்து மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்து தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி.சண்முகதாய் (வயது 55) க/பெ. சுந்தரம் (லேட்) என்பவருக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்

# உதவிகளே வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுகிறது!

## சட்டப்பேரவையில் அமைச்சர் சி.வி.கணேசன் விளக்கம்!

சென்னை, ஜூன் 25-

தமிழ்நாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் உதவிகளே வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுகிறது என்று சட்டப்பேரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் விளக்கத்துடன் பதிலளித்தார்.

சட்டப்பேரவையில் "தமிழ்நாட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் உதவிகளை புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?" என்று மார்க்சிஸ்ட் உறுப்பினர் நாகைமாலி எழுப்பிய கேள்விக்கு தொழிலாளர் நலத்துறைஅமைச்சர் சி.வி.கணேசன் பதிலளித்து பேசியதாவது:-

உறுப்பினர் அவர்கள் தமிழ்நாட்டிலே பணியாற்றக் கூடிய வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகள் வழங்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். நிச்சயமாக வழங்கப்படும். குறிப்பாக நம்முடைய தமிழ்நாட்டில் 20-6-2024 வரை 2660 வெளிமாநிலத் தொழிலாளர்கள் வாரியத்தில் பதிவு செய்துள்ளனர். தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ள வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு கல்வி உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, திருமண உதவித் தொகை, விபத்து உதவித் தொகை, விபத்து மரணம், இயற்கை மரணம், ஈமச் சடங்கு உதவித் தொகை போன்ற உதவிகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டிலே பணிபுரிகின்ற வெளிமாநிலத் தொழிலாளர் களுக்கு தமிழ்நாட்டிலே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்றே வழங்கப்படுகின்றன. குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், வெளி மாநிலத்திலிருந்து நம்முடைய மாநிலத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர் ஒருவர் இறந்துவிட்டால், அவரது உடலை சொந்த ஊருக்கு எடுத்துச்செல்வதற்கு விமானம் மூலமாகவோ அல்லது ஆம்புலன்ஸ் மூலமாகவோ எடுத்துச் சென்று, அவரது உறவினர்களின் இருப்பிடத்திற்கு எடுத்துச் செல்ல ஆகின்ற அனைத்துத் தொகையையும் வழங்குவதற்குரிய உத்தரவினை 21-7-2023 அன்று வெளியிட்ட முதலமைச்சர்தான் நம்முடைய முதலமைச்சர் அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் வரை வழங்குகின்றோம்.

வெளிமாநிலத்தில் இருந்து இங்கே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் அனைவரும் இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். குறிப்பாக, மாவட்ட அளவில் தொழிலாளர் நல அலுவலகங்களில், தொழிலகப் பாதுகாப்புத் துறை அலுவலகங்களில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட நிர்வாக அலுவலகங்களில், வேலையளிப்போர் மூலமாகவும் என இதுவரையில் 8 இலட்சத்து 37 ஆயிரத்து 540 பேர் பதிவு செய்திருக்கிறார்கள் .



### தொழிலாளர் நலச் சட்டங்கள் !

தொழிலாளர் நலச் சட்டங்களான, 1923 ஆம் ஆண்டு பணியாளர் இழப்பீட்டுச் சட்டம், 1936 ஆம் ஆண்டு சம்பள பட்டுவாடா சட்டம், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டம், 1961 ஆம் ஆண்டு மகப்பேறு நலச் சட்டம், 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1981 ஆம் ஆண்டு பிழைப்பூதியச் சட்டம், 1965 ஆம் ஆண்டு மிகை ஊதியச் சட்டம், 1948 ஆம் ஆண்டு கட்டிடச் சட்டம், 1996 ஆம் ஆண்டு ஆகியச் சட்டங்கள் புலம்பெயர் தொழிலாளர்கள் உட்பட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் பொருந்தும் என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், 1983 ஆம் ஆண்டு மாநிலம் விட்டு மாநிலம் குடிபெயரும் தொழிலாளர்களின் பணி முறைப்படுத்துதல் பற்றிய விதிகளில் என்ன சொல்லியிருக்கிறது என்றால்; புலம் பெயரும் தொழிலாளர்களுக்கு விதிமுறை, பணி நேரம், மிகைப்பணி நேரம், மருத்துவ வசதிகள், குளிர்ப் பாதுகாப்பு ஆடைகள், குடிநீர், கழிப்பிட வசதிகள், துணி துவைப்பதற்கான வசதிகள், ஓய்வறை வசதிகள், சிற்றுண்டிச்சாலை, குழந்தைகள் காப்பகம், தங்குமிடம் ஆகிய வசதிகள்.

வெளிமாநில தொழிலாளர்களுக்கு செய்து தர வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் புலம் பெயரும் தொழிலாளர்கள், இடப் பெயர்ச்சி, ஒரு COMPANYயில் வேலை செய்கிறவர் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்ல வேண்டுமென்றால்கூட, அதற்கு பயணப்படி கொடுக்க வேண்டுமென்று விதி வகைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. வெளிமாநில தொழிலாளர் களைப் பற்றி ஒரு சர்ச்சை வந்தபோது, பீகார் மாநிலத்தில் இருந்து ஊரக தொழில் துறையினுடைய செயலாளர் அவர்கள் தமிழகத்திற்கு வந்து, காஞ்சிபுரம், திருப்பூர் போன்ற மாவட்டங்களுக்கு சென்று அங்கே பணியாற்றக் கூடிய தொழிலாளர்களை சந்தித்து கேட்டபோது, தமிழ்நாட்டை ஆட்சி செய்துகொண்டிருக்கிற முதலமைச்சர் தளபதி அவர்களுடைய ஆட்சியிலே, நாங்கள் சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்ன, (மேசையைத் தட்டும் ஒலி) செய்தி, பத்திரிக்கைகளிலே, ஊடகங்களிலே, தொலைக் காட்சியிலே வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, வெளிமாநில தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பும், சட்டப்பாதுகாப்பும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், எந்தத் தொழிற்சாலை என்று குறிப்பிட்டுச் சொன்னால் உரிய நடவடிக்கை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சி.வி. கணேசன் பதிலளித்தார்.

## சட்டமன்ற மானியக் கோரிக்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கு

# வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்க தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை, ஜூன் 25-

சட்டமன்ற மானியக் கோரிக்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை அறிவித்த முதலவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்க மாநிலத்தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் நன்றி தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார். அது வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மாற்றுத்திறனாளிகள் நலத் துறை யையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துகொண்டு பல்வேறு வரலாற்று திட்டங்களை அறிவித்து செயலாக்கம் செய்ததை இன்றும் நன்றியுணர்வோடு நினைவு கூருகிறோம்.

முதலமைச்சராக பொறுப்பேற்ற தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்தும் மாற்றுத்திறனாளிகளின் இதயங்களின் குடி கொண்டார்.

இந்நிலையில், மாற்றுத்திறனாளிகள் நலனில் பெரிதும் கவனம் செலுத்தும் விதமாக,சட்டமன்ற மானியக் கோரிக்கையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கம் சார்பாக வைக்கப்பட்ட கோரிக்கைகளான மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை இணைப்பு சக்கர ஸ்கூட்டி வழங்கவேண்டும் எனவும்,அரசு துறையில் பணியாற்றும் 50 வயது அடைந்த மாற்றுத்திறனாளி பணியாளர்கள் பதவி உயர்வு பெற தடையாக உள்ள டி.என்.பி.எஸ்.சி. துறைத் தேர்வையும் ரத்து செய்து அத்தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தோம்.

இந்த கோரிக்கைகளையும் கனிவுடன் பரிசீலித்த முதல்வர், தலைவர் அவர்கள் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை இணைப்பு சக்கர ஸ்கூட்டி வழங்கப்படும் எனவும்,அரசு பணியில் பணியாற்றும் 50 வயதை கடந்த மாற்றுத்திறனாளிகளுக்கு டி.என். பி.எஸ்சி. துறை தேர்விலிருந்து விலக்களிக்கப்படும் எனவும் தாயுள்ளத்துடன் மானிய கோரிக்கையில் அறிவித்த முதலமைச்சர் -தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அமைச்சர் கீதாஜீவன் ஆகியோருக்கும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கம் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு ரெ.தங்கம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இரா.அருள் எம்.எல்.ஏ. தந்தை சேலம் இராமதாஸ் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜீன் 25-

சேலம் மேற்கு தொகுதி - இரா.அருள் எம்.எல்.ஏ.வின் தந்தை இராமதாஸ் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

சேலம் மேற்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள் அவர்களின் தந்தை இராமதாஸ் அவர்கள் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

அன்பு பொழிந்து வளர்த்த தந்தையை இழந்துவாடும் அருள் அவர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



# சொந்தக் கட்சிக்கே சூன்யம் வைக்கின்றனரோ!



**கேள்வி :** கள்ளக்குறிச்சி விஷச் சாராய விவகாரம் இரண்டு மாநிலங்கள் தொடர்புடையது என்பதால் சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் கூறுகின்றனவே?



**பதில் :** கடந்த 2019ஆம் ஆண்டில் யோகி ஆதித்ய நாத் ஆளும் உத்தரப்பிரதேசத்தில் இப்படி ஒரு விஷச் சாராய சாவு நடைபெற்றது. **உத்தரப்பிரதேசத்தில் சகாரான்பூர் பகுதியில் மட்டும் 75 பேருக்கும் மேல் பலியாயினர்.** இந்த விஷச் சாராய சாவுகள் நடந்தது 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில்!



பின்னர் அதே ஆண்டு மே திங்களில் **உத்தரப் பிரதேசத்தின் பாராபங்கி (Barabanki) என்ற பகுதியில் இதேபோன்று ஒரு விஷச்சாராய சாவுகள் நடந்து பலர் பலியாயினர்!**

மேலும் பி.ஜே.பி.யின் யோகி ஆதித்ய நாத் ஆட்சியில் இரண்டே ஆண்டுகளில் 143 பேர் விஷச் சாராயத்துக்கு பலியாயினர் என்ற குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் எழுப்பின.



மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு - அதாவது, **சகாரான்பூர், பாராபங்கி ஆகிய இடங்களில் விஷச்சாராயம் குடித்து இறந்த நிகழ்வுகளிலும் இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருந்தன!** முதல் நிகழ்வில் உத்ரகாண்ட் மாநிலமும் (அங்கும் பி.ஜே.பி.யின்ஆட்சிதான்) இரண்டாவது நிகழ்வில் ஹரியானா மாநிலமும் தொடர்பு படுத்திப் பேசப்பட்டன! **சகாரான்பூர் நிகழ்வின் போது உத்ரகாண்ட் மாநிலத்தில் இருந்துதான் விஷச் சாராயம் கொண்டு வரப்பட்டு உத்தரப்பிரதேசத்தில் உயிரிழந்தவர்கள் அருந்தியதாக உ.பி. போலிஸ் கூற; அதனை விஷச் சாராயம் அருந்தி இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மறுத்துள்ளனர். அந்த விஷச் சாராயத்தை அருந்தியவர்கள் யாரும் உத்ரகாண்ட் செல்லவேயில்லை என்றும் விளக்கியுள்ளனர்.**

அதேபோல பாராபங்கி பகுதியில் நடைபெற்ற நிகழ்விலும் விஷச்சாராயம் ஹரியானா மாநிலத்தில் இருந்து வந்ததாகக் கூறப்பட்டது! இந்த இரண்டு கொடூரமான நிகழ்வுகளுக்குப் பின்னால் எதிர்க்கட்சிகளின் சதி இருப்பதாக கூறி தப்பிக்க முயற்சி செய்தார் உத்தரப்பிரதேசத்தை ஆண்டு கொண்டிருந்த பி.ஜே.பி.யின் முதல்வர் யோகி ஆதித்ய நாத்! இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் மாயாவதி போன்றவர்கள் சி.பி.ஐ. விசாரணை கேட்டனர். பி.ஜே.பி. முதல்வர் யோகி ஆதித்ய நாத், அதனைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை; **"எல்லாம் எதிர்க்கட்சிகளின் சதியாக இருக்குமோ"** என்று, 'தான் சந்தேகிப்பதாக'க் கூறி நடந்த சம்பவத்திலிருந்து ஓடி ஒளிந்தார்.





**இன்று கள்ளக்குறிச்சி சம்பவத்துக்குசி.பி.ஐ. விசாரணை வேண்டும், முதலமைச்சர் பொறுப்பேற்க வேண்டும் என்றெல்லாம் கூக்குரலிடும் ஒன்றிய அமைச்சர் முருகன், அரைக்கால் வேக்காட்டு அரசியல்வாதி அண்ணாமலை போன்ற பி.ஜே.பி.யினர் அவர்கள் கட்சி ஆளும் உ.பி.யில் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றபோது எங்கே மேயப் போயிருந்தார்களோ?**

இந்தியாவில் கடந்த 2016 ஆம் ஆண்டு தொடங்கி 2020 ஆம் ஆண்டு வரையில் கள்ளச் (விஷ) சாராயம் குடித்து மொத்தம் 6000 (ஆறாயிரம்) பேர் இறந்துள்ளதாக 2022 ஆம் ஆண்டு ஜீலை 19-ந் தேதி அன்று 'லோக் சபா' வெளியிட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. **இந்த சாவுகளில் பெரும்பாலானவை பி.ஜே.பி. ஆண்டு கொண்டிருந்த மாநிலங்களில் நடைபெற்றவை!**




**சொந்த காசிலேயே சூன்யம் வைக்கும் வேலை என்பது போல அரசியல் தெளிவற்ற முருகனும் - அண்ணாமலையும் ஒருவேளை பி.ஜே.பி.க்கே சூன்யம் வைத்துக்கொண்டிருக்கின்றனரோ!**



**சிலந்தி**